செ.வெ.எண்:76 நாள்: 30.08.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் சு.பிரபாகர்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (30.08.2019) நடைபெற்றது.**

**விவசாய குழுக்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் பணை,புளியன், புங்கன், வேப்பன், அரச மரங்கள் நட்டு வளர்க்க படும், விவசாயிகளுக்கு முரங்கை விதை, நாட்டு பப்பாளி விதைகள் ஆராய்ச்சி மையங்கள் மூலம் பெற்று வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இவ்விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏற்கனவே 26.07.2019 அன்று பெறப்பட்ட 201 மனுக்களில் 184 மனுக்கள் ஏற்கப்பட்டது. மீதமுள்ள 17 மனுக்கள் நிராகரிக்கப்ட்டுள்ளது என விளக்கம் விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (30.08.2019) ஏரிகள், நீர் வரத்து வாய்க்கால் தூர் வாருதல், ஏரி மண் எடுத்தல், பேருந்து வசதி, குடிநீர் வசதி, ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், சாலை வசதி, அடங்கல், வன விலங்கு பிரச்சனை, கடன் வசதி, பயிர்கடன் உள்ளிட்ட பல்வேறு வகையான கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.

**மாவட்ட ஆட்சியர் பேசும்போது:**

வேளாண்மைத்துறை, வருவாய் துறையில் இ-அடங்கல் மற்றும் சிறு விவசாய சான்று பொறுவதில் உள்ள சிரமம் குறித்து கோரிக்கை வைத்துள்ளீர்கள், இது சம்மந்தமாக இ-சேவை மையம், கிராம நிர்வாக அலுவலர், வேளாண்மை அலுவலர்கள் மூலம் இ-அடங்கல் என்ற ஆப் மூலம் அடங்கல் பெறுவதற்கு விவசாயகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். ஏரிகள் கால்வாய்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றி வடக்கு கிழக்கு பருவமழையின்போது நீர் நிலைகளில் தண்ணீர் தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டமான குடிமராமத்து திட்டத்தின் கீழ் 10 ஒன்றியங்களில் 100 ஏரிகள் 325 குளம் குட்டைகள் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது.அந்த ஏரிகரைகளின் மீது விவசாய குழுக்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் பணை,புளியன், புங்கன், வேப்பன், அரச மரங்கள் நட்டு வளர்க்க படும். விவசாயிகளுக்கு முரங்கை விதை, நாட்டு பப்பாளி விதைகள் ஆராய்ச்சி மையங்கள் மூலம் விலைக்கு வாங்கி வழங்கப்படும்.மேலும் விவசாயிகள் வைத்துள்ள அனைத்து கோரிக்கைகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் திரு.தீபக் பில்கி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.கிருஷ்ணமூர்த்தி,துணை இயக்குநர்கள் திரு.அகன்டராவ், திரு.பாஸ்கர், முன்னோடி வங்கி மேலாளர் திரு.பாஸ்கர், வட்டாச்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள், வேளாண்மை, மின்சார வாரியம் மற்றும் விவசாய பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கிருஷ்ணகிரி.**